விலை: சதம் 75 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 கார்த்திகை 16 ஸபர் 2 இதழ் 289

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1-12-81

சனிற்ரறி வெயார்
(SANITARY WARE)
இறக்குமதி செய்த
கொமேட் — Commode
கிஸ்ரேண் மூடியுடன்
ரூபா 975/-ல் இருந்து
வாஷ்பேஷின்கள்
இணைப்புக்களுடன் ரூபா 450/-ல்
பாத் (Bath) 4000/- இல் இருந்து
மாபிள்கள், S. LON பைப்புகளும்,
பீலிகளும் மற்றும் இணைப்புகளும்
கிடைக்கும்.

சமுத்ரா
ரேட்ஸ் லிமிட்.
23/2, ஸ்ராலி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7236 (1585)

விமானப்படை விமானத்தில் கூட்டணி எம். பிக்கள்

[தொழும்பு]

பாராளுமன்றத்தில் நேற்று ஆரம்பமான பட்ஜட் மீதான நிதி விவாதத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் நேற்றுக் காலை விமானப் படை விமானத்தில் வந்து சேர்ந்தனர்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். ஆலாலசுந்தரம், பருத்தித்துறை எம். பி திரு. க துரை

6 ம் பக்கம் பார்க்க

★ யாழ். மாநகரசபையில் காரசாரமான விவாதம்!

பகிரங்க விசாரணை வேண்டும்: உறுப்பினர்கள் கோரிக்கை!

சும்மா இருந்து பலர் சம்பளம்

...வதாக உதவிமேயர் குற்றச்சாட்டு

...தாக (மைத நிதயர் ...ம். மணிசேகம்) ''யாழ் மாநகரசபை ...ராமத்துப் பகுதி ...லைகள் ஒழுங்கினம்

குறித்து, இச்சபை விரும்பினால் பகிரங்க விசாரணை செய்ய வேண்டும்'' என்று

யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் திரு. ஆ. துரைராஜசிங்கம் கோரிக்கைவிடுத்தார்.

யாழ் மாநகரசபை முதல்வர் திரு. இராஜா கிசுவநாதன் தலைமையில் கூடிய போது பிரேரணை நடைபெற்றது. திரு. துரைராஜசிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''வங்கிகளிலிருந்து செய்கிறதும் 'ஒவர்சியர்மார்'களை வேலைநேரத்தில் அங்கு காண முடிவதில்லை. ஒழுங்கைகளுக்கு பல்லாயிரக்கணக்கான ரூபா ஒதுக்கியும் வேலைகள் நடைபெறவில்லை. சில இடங்களில்

6-ம் பக்கம் பார்க்க

★ திருப்பத்தூர் இடைத்தேர்தல்:

இந்திராகாங்கிரஸ் அமோக வெற்றி!

திருப்பத்தூர், நவ. 30

திருப்பத்தூர் தொகுதி சட்டசபை உபதேர்தலில் இந்திராகாங்கிரஸ் வேட்பாளர் திரு. ஆர். அருணகிரி சுமார் 25,000க்கும் அதிகமான வாக்குகளால் வெற்றிபெற்றார். இவரின் வெற்றி நேற்றிரவு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்திராகாங்கிரஸ் வேட்பாளர் திரு அருணகிரிக்கு 42300 வாக்குகளும், ஜனதா கட்சி வேட்பாளருக்கு 17,635 வாக்குகளும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு வி ஆர் சண்முகத்திற்கு 16,956வாக்குகளும் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர் முதலிடம் இரண்டாவது இடத்தைப் பெற்றுவந்த போதிலும் பின்னர் 3வது இடத்தையே பெற்றார். ஜனதா கட்சி உறுப்பினர் 2வது இடத்தை பெற்றுவந்தார்.

இந்திராகாங்கிரஸிற்கு முழு ஆதரவையும் வழங்கிய தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி

(6ம் பக்கம் பார்க்க)

யாழ். லயன்ஸ் கழகம்
யாழ். லியோ கழகம்
யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி லியோ கழகம்
யாழ். மத்திய கல்லூரி லியோ கழகம்.
(அமையும் தருவாயில்)
ஆகிய இணைந்து நடாத்தும்.

நத்தார் - புதுவருட
வாழ்த்து மடல் வரையும்
சித்திரப் போட்டி - 1981

போட்டி 10-12-81 வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 1 மணி வரை யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல பிள்ளைகளும் காலை 8 மணிக்கு போட்டி மண்டபத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

பிரவேசக்கட்டணம் ரூபாய் ஒன்று
[போட்டி மண்டபத்தில் கொடுத்தல் வேண்டும்
விண்ணப்ப முடிவு திகதி 08 - 12 - 81

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-
லயன் எஸ். அற்புதானந்தா
கொமேஷல் பிறின்ரேர்ஸ், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

...ப்பிரிவு - 6 வயது முதல் 10 வயது வரை.
இடைப்பிரிவு:- 11 வயது முதல் 14 வயது வரை.
மேற்பிரிவு:- 15 வயது முதல் 18 வயது வரை

கீழ்ப்பிரிவு, இடைப்பிரிவு மாணவ மாணவிகள் தாம் விரும்பும் சித்திரங்களை வரையலாம்.

...பிரிவு மாணவ மாணவிகள், யேசுபெருமான். வலது ...நதோருக்கு வாழ்வளித்தமை, நோயாளிகளை குணப் ...த்தியமை, சகலமக்களையும் அன்பாக நேசித்தமை. ...விகளை இரட்சித்தமையாகியவற்றை மையமாக வைத்து ...யங்களை வரையலாம்.

...திக விபரங்களுக்கு:-
லயன். பா. சிவானந்தன்
...நாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம், போன்.- 7707
...யன். எஸ். திருநாவுக்கரசு
...னல் இன்ஸ்ரியூட், லயன். எஸ். செபஸ்தியாம்பிள்ளை
...ரங்ஷால் வீதி, தலைவர் யாழ் லயன்ஸ் கழகம்
...ழ்ப்பாணம். தொலைபேசி:- 7738, 8006

பாராளுமன்ற அதிகாரிகள் இருவர் பெரும் பணமோசடி செய்துள்ளனராம்

சபையில் பதுளை எம். பி. தகவல்

[கொழும்பு]

பாராளுமன்றத்தில் இரண்டு அதிகாரிகள் பெரும் பணம்மோசடி செய்துள்ளனர் என்று பதுளை எம். பி. திரு. வின்சன்ட் டயஸ் நேற்று பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தினர்.

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம், பொதுநலவாயமைப்பு பாராளுமன்றநிறுவனம் ஆகிய வற்றின் நிதிதான் இந்தப் பாராளுமன்ற அதிகாரிகளால் மோசடிசெய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட பதுளை எம். பி. இரு அதிகாரிகளும் குறுகியகாலத்தில் கோடீஸ்வரர்களாகியுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

ஊழல் மோசடி!

''பாராளுமன்றம், நாட்டுக்கு உதாரணமாகத் திகழவேண்டுமே தவிர, மோசடிக்காரர்களின் குகையாக மாறக் கூடாது என்று தெரிவித்த திரு. வின்சன்ட் டயஸ் மேலும் கூறியதாவது:

மூன்று பாராளுமன்ற செயலாளர் நாயகம், பல

(6ம் பக்கம் பார்க்க)

சம்பளம் 13 ரூபா அதிகரிப்பு

[தொழும்பு]

வாழ்க்கைச்செலவு புள்ளி அதிகரித்துள்ளதால் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் 13 ரூபா கூடுதலாக வழங்கப் படும்.

அக்டோபரில் 391 ஆக இருந்த வாழ்க்கைச்செலவு புள்ளி நவம்பரில் 397. 6 ஆக அதிகரித்துள்ளது. இதனால் அரசாங்க ஊழியருக்கு 13 ரூபா கூடுதலாக வழங்கப் படும்.

(6ம்

மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்:

தேர்தல் ஆணையாளரை உதாசீனம்செய்து தேர்தலை நடத்தினர்கள்!

சபையில் 'அமிர்' குற்றச்சாட்டு

[கொழும்பு]

கடந்த மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலின்போது தேர்தல் ஆணையாளரை உதாசீனம்செய்து தேர்தலை நடத்தினர்'' என்று

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

தேர்தல்திணைக்கள நிதி முறைப்பு மீது உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

கடந்த மாவட்டசபைத் தேர்தலின்போது தேர்தல் ஆணையாளர் ஒரு நிமிடநேர அறிவித்தலுடன் நீக்கப்பட்டு, அவர்களின் இடத்திற்கு "பிபல்" போன்ற சித்தாந்திகளை உடன் நியமிக்கப் பட்டனர். இவ்வாறான பாரதூரமான நடவடிக்கைகளை

(6-ம் பக்கம் பார்க்க)

இரு மாடுகளைத் திருடி விற்றார்களாம்
இறைச்சியாக மீட்பு

(மண்டைதீவு) அல்லைப்பிட்டியில் திருடப்பட்ட இருமாடுகளில் ஒன்று புங்குடுதீவில் மீட்கப்பட்டது. மற்றைய மாடு வெட்டப்பட்ட நிலையில் யாழ் இறைச்சிக் கடையிலிருந்து மீட்கப்பட்டது.

இதுதொடர்பாக இருவர் பொலிசாரினால் கைசெய்யப்பட்டனர்.

அல்லைப்பிட்டியிலுள்ள ஒரு வீட்டில் இருவாலிபர்கள் இரவு வேளையில் மாட்டைத் திருடிச் சென்று ஒரு மாட்டை புங்குடுதீவில் ஒருவருக்கு விற்றுவிட்டு மற்றைய மாட்டை யாழ் நகரிலுள்ள இறைச்சிக்கடை உரிமையாளர் ஒருவருக்கு விற்றார்களாம்.

மாடுகளைக்களவு கொடுத்தவீட்டுக்காரர் ஊர்காவற்றுறை பொலிசில் முறைப்பாடு செய்ததைத்தொடர்ந்து பொலிசார் புங்குடுதீவில் மாடு விற்பதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்து புங்குடுதீவிலுள்ள ஒரு வீட்டில் வைத்து ஒருமாட்டை மீட்டதுடன் மாட்டை திருடி விற்ற வாலிபர்களையும் மேற்படி வீட்டுக்காரருடன் சென்று கைது செய்தனர்.

மற்றைமாடு யாழ் நகரிலுள்ள ஓர் இறைச்சிக்கடையில் வெட்டப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டது. (இ)

அகில இலங்கை ஹாக்கிப் போட்டி
யாழ். குழு தோல்வி

(அரியாலை) அகில இலங்கை ஹாக்கி நஷனல் போட்டியில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட ஹாக்கி குழு கொழும்பில் நடந்துகொண்ட மூன்று போட்டிகளில் ஒன்றில் வெற்றியும் இரண்டில் தோல்வியும் அடைந்தது.

கொழும்பு பம்பலப்பிட்டி [illegible] போட்டியில் இந்துக்கல்லூரியுடன் [illegible] விட்ட யாழ்ப்பாண மாவட்ட குழு 2:1 கோல்களினால் வெற்றியீட்டியது. யாழ். கோஷ்டியின் சார்பில் விளையாடிய யாழ் பரியோவான் கல்லூரி மாணவர்களான செல்வன்கள் எஸ். கிறிதயாளனும், பி. ரி. ஆர். சினலும் தலா ஒரு கோலை அடித்து தமது கோஷ்டிக்கு வெற்றியீட்டிக் கொடுத்தனர்.

கொழும்பு நீலக்குழுவிற்கும் யாழ். மாவட்டக் குழுவிற்குமிடையில் நடைபெற்ற ஹாக்கிப்போட்டியில் கொழும்பு நீலக்குழு 3:1 கோல்களால் வெற்றியீட்டியது. போட்டிகள் [illegible] கொழும்பு பம்பலப்பிட்டி மைதானத்தில் நடைபெற்றன. (வே)

8 பேருக்கு மீண்டும் வேலை

(மன்னார்) கடந்தவருடம் இடம்பெற்ற வேலைநிறுத்தத்தின்போது மன்னாரில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 8பேருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தின்போது வேலை நீக்கம் செய்யப்பட்ட 3பேர் ஏற்கனவே வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது 8 பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியில் வேலைநிறுத்தத்தின்போது வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களில் மொத்த 11 பேருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வேலை வழங்கப்பட்டுள்ள 8 பேரும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் கடமையாற்றுவார்கள்.

மின்சாரம் தாக்கி மரணம்

(யாழ்ப்பாணம்) டியூஷனுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய மாணவன் ஒருவர், மின்சார வயரில் சிக்குண்டு பரிதாபகரமாக மரணமானார்.

தம்பித்துரை மாலைகரன் (16 வயது) என்ற மாணவர் சென்ற 27 ம் திகதி இரவு டியூஷன் முடிந்து கொண்டு கோண்டாவில் கிழக்கிலுள்ள தனது வீட்டுக்கு சயிக்கிளில் சென்றுகொண்டிருந்தாராம்.

இவர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது அறுந்து நிலத்தில் கிடந்த மின்சார வயரில் சிக்குண்டு அதே இடத்திலேயே மரணமானாராம்.

இறந்தவரின் தகப்பன் க. தம்பித்துரை, மாமனார் கெ. முத்தையா ஆகியோர் சாட்சியளித்தனர்.

சுன்னாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஏ. ஈ. ஜெகநாதன் சாட்சியை ஆஜர் செய்தார்.

பதில் நீதவான் திரு எஸ் அமிர்தலிங்கம் விபத்து மரணம் என தீர்ப்பளித்தார். (மா)

இசை, நடன, நாடக விருதுகள்

சங்கீத, நடன, நாடக அக்கடமியின் 1981ம் ஆண்டுக்கான கர்நாடக இசை விருது ராதா ஜெயலட்சுமிக்கும், நாதஸ்வர இசைக்கான விருது தாமரைப் பேட்டை கிருஷ்ணனுக்கும் நாடகக் கலைஞருக்கான விருது திரு. ஆர். எஸ். மனோகருக்கும், குச்சுப்புடி நடனத்திற்கான விருது திரு. சின்னசத்தியத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. (வெ)

இந்த மரக்காலைகள் மூடப்படும்

(கொழும்பு) பதிவுசெய்யப்படாத மரக்காலைகளை மூடிவிடுவதற்கு வன பரிபாலன இலாகா முடிவு செய்துள்ளது.

நாட்டிலுள்ள 2000 மரக்காலைகள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளன.

82 ஜனவரி மாதத்திற்குமுன் மரக்காலைகளை பதிவு செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான 10 பேர் பரிசோதனைக்குழு அமைக்கப்படும்.

பதிவு செய்யப்படாத மரக்காலைகள் ஜனவரி முதல் மூடப்படுமென்றும் மரங்கள் பறிமுதல் செய்யப்படுமென்றும் வனபரிபாலன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (?)

மாட்டுத்தீன் தொழிற்சாலை

(மன்னார்) மன்னாரில் பனை ஓலையிலிருந்து மாட்டுத்தீன் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ் தொண்டமான் மேற்கொண்டுவருகிறார்.

இதற்கான ஆய்வு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று மன்னார் மாவட்ட பனம் பொருள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கலாநிதி ஜோசப் [illegible] தெரிவித்தார். (ச)

சமாதான நீதிபதி

(சாவகச்சேரி) சாவகச்சேரி நகரசபை உபதலைவர் திரு கின்னர்சணமுகம் சமாதான நீதிபதியாக மாவட்ட நீதிபதி திரு. சீ. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சமூகத்தொண்டனும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளனுமாகிய இவர் சாவகச்சேரி டிறிபேர்க் லூரி அலுவலக உத்தியோகத்தராவார்.

மருந்து கலவையாளர்

(பண்டத்தரிப்பு) மருந்து கலவையாளர்களுக்கான பெருமளவு இடமாற்றங்களைப் பற்றி தீர்மானிப்பதற்காக யாழ். சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் இடமாற்றச்சபை கூடிய போது பின்வரும் இடமாற்றங்களை எதிர்வரும் 1982-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைமுறைப் படுத்துவது என்று தீர்மானித்துள்ளது.

தொல்புரம் அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் திரு. வி. செல்வராசா வேலணை அரசினர் வைத்திய சாலைக்கும் வேலணையில் கடமையாற்றும் திரு. ஏ. துரைராஜா சொக்குவில் மத்திய மருந்துச்சாலைக்கும் சொக்குவில் கடமையாற்றும் திரு. கே. துரைராசா அம்பன் அரசினர் வைத்திய சாலைக்கும் அம்பனில் கடமையாற்றும் திரு. எஸ். சிவபாதரத்தினம் தொல்புரத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பூநகரி அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் திரு. எஸ். திருநாவுக்கரசு பலாலி அரசினர் மத்திய மருந்துச்சாலைக்கு பலாலியில் கடமையாற்றும் திரு. எஸ். கந்தசாமி பூநகரிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (இ)

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சித்தன்கேணி, காரைநகர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பையா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

தம்பையா கைம்பெண் சிசலாட்சி, காரைநகர் வீதி, சித்தன்கேணி. மனுதார்

மரணசாதன நிராயாதிக்கம் இல, 3628

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதிப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆந்நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதிப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி.

தா. குலஞானம்
பதிவாளர்

1981 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 9 ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

இ. பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணி & பிரசித்த நொத்தாரிஸ்
52, வைமன் வீதி.
யாழ்ப்பாணம். 1564

உலொறி விற்பனைக்கு

பூநகரி ப. நோ. கூ. சங்கத்தின் 24/8540 இலக்க மொறிஸ் உலொறி விற்பனைக்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவுசெய்ய விரும்புவோர் பொதுமுகாமையாளர், பூநகரி ப. நோ. கூ சங்கம், பூநகரி என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் 14-12-1981 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் லொறி கேள்விப் பத்திரம் என்று குறிப்பிடப்பட வேண்டும். கேள்விப்பத்திரம் மீளளிக்கப்படாத ரூபா 5/- செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 500/- செலுத்திய பற்றுச்சீட்டு இக்கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். உலொறியை பார்வையிட விரும்பின் கிழமை நாட்களில் முன் அறிவித்தல் கொடுத்தால் எம்மால் சங்க கராஜில் வைத்து பார்வையிட ஒழுங்கு செய்து தரப்படும்.

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
(1595) பூநகரி.

வரி விளம்பரம்

தேவை

16—22 வயதிற்குமிடைப் பட்டவர்கள் தேவை பயிலுநர்களாக தேவை (Apprentices) விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் 5-12-81ல் நேரில் வரவும். எல்பிகோ வாளித் தொழிற்சாலை, காவிட்டபுரம் தெல்லிப்பளை 1579

தாச்சுவைச்சல் வேலைக்கு ஆட்கள் தேவை. இருபாலாரும் நேரில் விண்ணப்பிக்கவும்: அருள் ஹென்டிகிறாப்ட்ஸ், 584, கண்டிவீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம். 159[illegible]

ரூ. 20 ஆயிரம் செலவில் வீதி

(பச்சிலைப்பள்ளி) பச்சிலைப்பள்ளித் தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து புலோபளை [illegible] வீதி அமைக்கப்படவுள்ளது. இதற்கென 20 ஆயிரம் ரூபாவை பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் ஈ/657 [illegible] வழக்கில் வாதி யாழ். அரியாலை 389, கண்டிவீதி [illegible] சரவணமுத்துவுக்கு போகவேண்டிய தீர்வை [illegible] 9,550/- ரூபாவும், மேலும் ரூபா 5,000/-க்கு 5-12-[illegible] 27 - 3 - 80 வரை வருடம் 24% வீதவட்டியும், [illegible] சேர்ந்த முழுத்தொகைக்கும் இறக்கும்வரை 5% வீ[illegible]யும், வழக்குச் செலவு ரூபா 799-10 சதமும், [illegible] சலார்களும், இதில் கொடுபட்ட 2,000/-ரூபா கழித்து மிகு தொகையை பிரதிவாதிகளாகிய யாழ் அரியாலை [illegible] சின்னத்தம்பி செல்லத்துரை இறந்து விட்டபடியால் [illegible] ரின் சட்டப்பிரதிநிதியும் க சி. செல்லத்துரை வசம்பெண் செல்லம்மாவிடம் அறவிடுவதற்காக எனக்களிக்க அதிகாரத்தின்படி கீழ்க்காணும் ஆதனம் 23-12-1981 காலை பத்து மணிக்கு தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ். டிஸ்திரிக்கும் பகுதியும், சுண்டிக்குளி கோ. பற்று [illegible] தெரு இறை "ஆத்திக்காட்டு வளவு" நில-பர 11 [illegible] 12 இதில் [illegible] போக மிகுதியில் கிழக்குப்புறமாக நில பர 6 பயிர்களும், கிழக்கு - ஒழுங்கை. வடக்கு சடையர் கந்தையாவின் காணி. மேற்கு - (மிகுதிக்காணி) தெற்கு - கண்டி வீதியும், புடவை நிலையக்காணியும். பதிவு L/396/165.

வி. செ. குட்டிப்பிள்ளை,
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்.
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம் 1594

புத்தகசாலை திறப்புவிழா

மக்கள் பிரசுராலயம்
யாழ். கிளை

புதன்கிழமை—2-12-1981 பி. ப. 4.00 மணிக்கு
யாழ்ப்பாணம் இல: 40,
சிவன்கோவில் வடக்கு வீதியில்

யாழ். மாநகர முதல்வர்
மாண்புமிகு இராஜா விசுவநாதன்
அவர்களால் திறந்துவைக்கப்படும்.

வர்ணப்படங்களுடன் கூடிய

★ சிறுவர் புத்தகங்கள்
★ விஞ்ஞானம் ★ கணிதம்
★ தொழில் நுட்பம்
★ இலக்கியம் ★ அரசியல்
★ வரலாறு ★ பொறியியல்
★ சமூகவியல் ★ பொருளியல்

போன்ற மற்றும் நூல்களும் சோவியத் சஞ்சிகைகளும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளும் இடம் இதுவே.

கல்வியை வளர்ப்போம் திரண்டு வாருங்கள்

1591

மணிவாக்கு

ஒதார்க்கில்க உணர்வொடு ஒழுக்கம்.
— ஔவையார்

நமது நோக்கு

வடபகுதி வெள்ள ஆபத்து

வடகிழக்கு அடைமழை; ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர்; நெல் வயல் நாசம்; கிளிநொச்சி வெள்ளக்காடு; முல்லைத்தீவில் 70 வருடங்களுக்குப் பின் மோசமான மழை; வீதிகளில் 4 அடி வெள்ளம்!

நேற்று வெளியான தமிழ்த் தினசரிகளின் தலையங்கங்களின் இவை.

பருவ மழையிலாது, நெற்பயிர்கள் நாசமாகியதாக பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு பிற்பாடாவது மழை பெய்யத் தொடங்கியது மகிழ்ச்சிக்குரியதே. ஆனால் வேளாண்மையானது மக்கள் கெடுமென்ற நம்பிக்கை உதயமாக, இயற்கையன்னை சிறிதளவு இரக்கம் காட்டியதாகவே கருதவேண்டியுள்ளது. வேளாண்மையை மட்டுமே நம்பி வாழ்வதே அபாயமாக மாறிவிட்டது.

விடாது பெய்த கடும் மழை, ஆழமற்றுக் கிடந்து வரண்ட சிறு குளங்களின், குளங்களின் நீர்மட்டத்தை உதவ, திறந்திருந்த நிலைமை-இவைபோன்ற காரணங்களால் முல்லைத்தீவு, வவுனியா பிரதேசங்களிலும் இவ்வாறான பகுதியிலும் வெள்ளநீரால் பேராபத்தாகவிருக்கிறது; வெள்ளம் வடியுமென நம்பப்படுகிறது.

ஆயிரக்கணக்கில் வீடுகளை இழந்த மக்கள் உண்ண உடையின்றி அவதிப்படுவதாக, பொதுமக்களின் அவசர உதவி கோரப்பட்டுள்ளது. நிலைமையை நேரில் கவனிக்கவும், வீடு இழந்து தெருச்சோட்டு நிற்கும் அகதிகளுக்கு ஆவன செய்யவும், அரசாங்க அதிபர் படகுகள் தேவையென்ற அவசர கோரிக்கை அரசுக்கு விடுத்துள்ளார்.

நிலைமைக்கேற்ற உடனடி உதவிகளை வடக்கு, தெற்கு என்ற எவ்வித பாரபட்சமின்றியும், தாமதமின்றியும், வழங்க அரசு விரையுமென்பதில் ஐயமில்லை.

இவ்வித பெரு நெருக்கடியில் பொதுமக்கள் தமிழ் ஒருமுகப்பட்ட உடனடி நிவாரணம் வழங்க, சீரான அமைப்பில்லாத ஸ்தாபனங்கள் அவசியம்.

ரோட்டரி, லயன்ஸ் போன்ற சர்வதேச நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற தொண்டு நிறுவனங்கள் அரசின் உதவியைக் காத்திருக்காமல் உடனடியாக இயங்க வேண்டும். மாவட்ட சபையின் பங்கு அரசாங்க உதவியென்றே கொள்ளவேண்டும்.

தனியாரின் உதவி - உணவு, உடை போன்ற பொருட்கள் ஸ்தாபன ரீதியாக விநியோகிக்க ஒழுங்கு செய்ய தனித்தனியே வேண்டும்.

காலநிலை கண்டபடி கெடுத்தது. நீரை விரைவில் வடியச் செய்ய போன்ற மனித அட்டூழியங்களுக்கு இயற்கையின் தண்டனையே வரட்சியும் வெள்ளமும்.

ஜெனீவா மாநாடு

உச்சி மாநாடு கூடப் பற்றி எழுத எழும்போதே தெல்லாம் ஆச்சரியம் ஏற்படுகிறது நூதனமல்ல

கங்குன் மாநாடு பற்றி நாம் எழுப்பிய ஆச்சரியம் நியாயமானதென்பது இன்றைய முடிவு.

உலக சமாதானம் இரு வல்லரசுகளான அமெரிக்காவிலும் சோவியத் ரஷ்யாவிலும் தங்கியிருப்பதென்ற பரந்த நம்பிக்கை தப்பானது.

இவை இரண்டையுமிட வேறு உயிருள்ள நாடுகள் உலகிலில்லையா? அவைகளெல்லாம் இரண்டாகப் பிரிந்து இவ்விரு அரசுகளுக்கும் வாலாயிருக்கின்றனவா?

மூன்றாம் உலகமென்றெழுந்த அணிசேரா நாடுகள் மூன்றாவது அணியுமல்ல அமெரிக்காவுக்கோ அல்லது ரஷ்யாவுக்கோ சரணடைந்து விடவுமல்ல. ஏனுலகை உலகை அழித்துவிட நாம் வாளாவிருக்கலாமா?

இங்கேயென்று இன்னும் கூர்ப்பு தப்பிச் சொல்லும் நிலையில் உலகம் இருக்கின்ற தென்பது எமது நம்பிக்கை அணிசேரா நாடுகள் இச் சவாலை ஏற்றுத் தயாராக வேண்டும்

உலகத்தை [- உலக] படத்தை எடுத்துப் பார்த்தால் நிலமை சந்தேகமின்றிப் புரியும்.

ஆப்கான் பிரச்சனை மிக மோசமானது. பாகிஸ்தானிலும் குவியும் ராணுவ ஆயுதங்கள், பங்களாதேஷ் போல் ஆப்கானிஸ்தானிலிருந்து அந்த விரையும் ஆதிகள் காரணமாக எழக் கூடிய ஒரு போருக்காகலம். இவ்வித போர் இந்தியா வுக்கு அபாயமானது தெளிவு.

பலஸ்தீன் பிரச்சனைக்கு உலக சமுதாயம் ஆனுதாபம் காட்டியபோதும் அமெரிக்காவும் இஸ்ரேலும் பிடிவாதமாகவிருப்பதால், மத்திய கிழக்கில் நிலவும் அமைதியின்மைக்கு இது கிடைக்க ஏதுபடுத்துகிறது.

இவ்விரண்டுக்கும் அவசியமானது இந்து சமுத்திர ஆதிக்கம். அமெரிக்கா துணிவாக இச்சமுத்திரப் பிரதேசத்தில் தனது ஏழாம் கடற்படையை உலாவ விடுவது இப்பிரதேச நாடுகளை நாடுகளுக்கு நிரந்தர அச்சத்தை ஏற்படுத்திவருகிறது.

இந்தப் பின்னணியில் இலங்கை அரசு திருகோணமலை துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைக்கு வழங்கியிருக்கும் சாதாரண சலுகைகள் அணிசேரா நாடுகளின் சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறது. இந்து சமுத்திரம் நிச்சயமாக அமைதிப் பிரதேசமாக வேண்டியது.

கடந்த விவகாரங்கள் இன்னும் குணமடையவில்லை. சீனுவுக்கும் ரஷ்யாவுக்குமுள்ள வெட்டுப்பகை தொத்துப்பகை கூடுவதால் சீனு அமெரிக்கா சாருவதாக நடிக்கிறது.

ஐ.நா. இன் மதிப்பை இரண்டு நிரந்தர அங்கத்தவர்களான பிரிட்டன், பிரான்ஸ் பொதுவாக உலக அமைதியையே விரும்புகின்றன.

மேற்கு ஜெர்மனி அதிபர் ஸ்மித் இவ்விரு வல்லரசுகளையும் சமன்பிடிப்பதில் பெருமுயற்சி பண்டிருக்கிறார். ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற சந்திப்பு எவ்வித ஆக்கத்தையும் ஏற்படுத்தாதென்பதே அவருடைய நம்பிக்கை. ஒற்றுமை ஏற்படுமாவென்பது கேள்விக்குறிதான்.

"தேங்காய் சுயதேவைப்பூர்த்திக்கு வீட்டுக்கு 5 தென்னைகள் நாட்டுங்கள்" துரைரத்தினம் எம்.பி. வேண்டுகோள்

[புலோலி-பச்சிலைப்பள்ளி நிருபர்]

"வீடுகள்தோறும் ஐந்து தென்னங்கன்றுகளை நாட்டுவதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு வருடாந்தம் தேவைப்படுகின்ற 500 தொடக்கம் 750 வரையான தேங்காய்களைப் பெற முடியும். இதனைக் கருத்தில் கொண்டு வீடுகள்தோறும் தென்னங்கன்றுகள் நாட்டப்பட வேண்டும்."

மேற்கண்டவாறு பருத்தித்துறையில் நடைபெற்ற தென்மேலவை அபிவிருத்திக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை எம். பி. திரு. வ. துரைரத்தினம் குறிப்பிட்டார்.

புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துத் தொடர்ந்து உரையாற்றிய எம். பி. துரைரத்தினம் குறிப்பிட்டதாவது:

தேங்காயின் விலையினை அதிகரிப்பதற்கு தேங்காய்த் தட்டுப்பாடேற்படும் என நான் 5 வருடங்களுக்கு முன்பே தெரிவித்திருந்தேன். மக்கள் பெருமளவு பணத்தை தேங்காய்களுக்காக செலவிடுகின்றனர். தற்போது 25,000 தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன.

"வீடுகளில் ஐந்து தென்னங்கன்றுகளாகுதல் நாட்டப்பட வேண்டும். வீதியோர நாட்டப்பட்ட பனை தென்னங்கன்றுகளும் மானியம் வழங்கப்படவேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரினேன்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு 500 தொடக்கம் 750 வரை தேங்காய் தேவைப்படுகின்றது. இத் தேங்காய் தேவையைப் பூர்த்திசெய்ய வீடுகள்தோறும் ஐந்து தென்னங்கன்றுகள் நாட்டுவது மிகவும் பொருத்தமானதாகும்.

சங்கங்களும் ஆதரவு

தென்மேலவை அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு தேவையான பணம்பொருள் உற்பத்தி வரி பங்கீடு என்பவற்றில் ஒரு தொகுப்பு வழங்குவதாக உறுதிப்படுத்தியுள்ளன. இப்பணியில் உதவிகளுடன் எமது பகுதிகளில் தென்மேலவை அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்படுத்த வேண்டும்.

"இரவலே மக்களே வியக்கும் வகையில் பருத்தித்துறை மீனவர்களும் விவசாயிகளும் வாழ்கின்ற மக்கள் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ளார்கள். இரவலே மக்களைப்போல் திரு. மணிவண்ணன் விவசாயம் செய்கின்றார்கள் ஆனால் பருத்தித்துறை மீனவர்களில் வாழ்கின்ற மக்கள் அவர்களிலும் பார்க்க ஒருபடி முன்னேறி கடற்கரை ஓரங்களிலே உள்ள மணல் வளமாகி, நெல் விளைப்பதையும் வெங்காயம் பயிரிடுவதையும் காணக்கூடியதாக வுள்ளது. பெருமளவு தென்னைகளையும் அங்கு காணலாம்.

"தென்மேலவைக்குக்கீழ் ஊடு பயிராக வெங்காயம், மிளகாய், வாழை, தென்னை, நிலக்கடலை, கொக்கோ, கோப்பி எவ்வளவற்றை பயிரிடலாம்."

பனம்பொருள் அபிவிருத்திச் சபைப் பொதுமுகாமையாளர் கலாநிதி மோகன் தாஸ், மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. எம். தம்பிமுத்து, உதவி அரசாங்க அதிபர் திரு: வேலுப்பிள்ளை உட்பட இன்னும் பலர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

[அ]

யாழ் மாவட்டத்தில் 2,457 ஆசிரியர்கள் பற்றாக்குறை!

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் 2,457 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாகச் சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களில் இருந்து அறியப்படுகிறது.

சில வருட காலமாக பாடசாலைகளில் ஆசிரியர்கள் நியமனம் நடைபெறவில்லை என்பதும் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகள் காரணமாகவும் ஆசிரியர்கள் தொகையும் அதிகரித்துக்கொண்டு வருவதும் மற்றுமொரு காரணமாகும்.

மேற்படி பின்வரும் தரங்களிற்படி தேவையான ஆசிரியர்களின் விபரம்:

ஒய்வுபெற்றோர் கல்விச் சேவை 4-ம் தரம்: 11; 5-ம் தரம்: 38; தரம் 3-ம் தரம்: 17; விசேஷ தரங்கள்: முதலாம் தரம்: 23; இரண்டாம் தரம்: 29; மூன்றாம் தரம் 143; 5ம் தரம் : 239.

கலைப்பட்டதாரிகள்: 287: விஞ்ஞானப் பட்டதாரிகள்: 33: விவசாயப் பட்டதாரிகள்: 03; வர்த்தகம்: 59

பொதுப் பரீட்சை பெற்றோர்: 66: ஆங்கில பயிற்சி 233: விஞ்ஞானப் பயிற்சி 163; கணித பயிற்சி 174, கர்நாடகப் பயிற்சி: 08: விவசாயப்பயிற்சி 83, நுண்கலைப் பிரிவில் சங்கீதம்: 89, நடனம் 18, ஓவியம் 18, வீட்டுப்பணி 60, கட்டிடவியற்சி: 63; மா

(6-ம் [illegible])

கேட்டீர்களா?

'சோ சோ' என்று மூன்று தினங்களாக மழை அடாத்தாகப் பெய்து வானம் வெளுத்துத் தொலைத்திட்டது. பழைய படி நகரங்களின் சுறு சுறுப்பான நடமாட்டம். முக்கியமும் சிறு ஒழிவு.

ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு முதலான விவசாயப் பூமிகளில் பத்தாயிரம் மக்கள் குடிபெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். வெள்ளத்திலிருந்து பலரைக் காப்பாற்ற வல்லமை சேவை தாப்பட்டுள்ளது. பாவம், நமக்கெல்லாம் சோறு போடும் அவர்களுக்கு இன்று நாம் உணவு உடை வழங்கும் நிலை வந்துள்ளது. மழையைக் கண்டு தூதாகிலித்த அம்மக்கள், இப்பொழுது அதனைச் சபித்து வளவுக்கு வந்திட்டார்கள்!

நமது நிலைவிதிக்கு யாரை தோவது.

வேள்ள அனர்த்தம் புயல் அனர்த்தம், என்றெலாம் பாதிக்கப்பட்ட அகதிகள் என்று அழைக்க நாம் அகதிகளாகி வருகின்றோம்!

அகதிகளுக்கும் நிவாரணத்துக்கும் பிரிக்கமுடியாத தொடர்பு இருந்து வருவதை நாம் அறிவோம். அகதிகளுக்கென்று அரசாங்கமோ வேறு சமூக நிறுவனங்களோ நிவாரணமேதும் முழுமனதுடன் பட்சபாதமின்றி வழங்கியதாக சரித்திரம் கிடையாது.

பிரிட்டிஷ் இளவரசி டயானா மகனையும் அழைத்துக்கொண்டு முரண்டு பிடிக்கிறாராம்.

எதிர்வரும் ஜூனில் டயானு குழந்தை பெறுவார். இளவரசர் சார்ள்ஸ்-டயானு சீமாட்டி கல்யாணம் நடந்தது கடந்த செப்டம்பரில்தான். இளவரசருக்கு ஒரு சபாஷ்!

ஜூனில் மாதம் டயானுவுக்கு குழந்தை பிறக்கும் என்பது நிச்சயம், ஆனால் அது நிச்சயிக்கப்படக்கூடிய விஷயம்தான். ஆனால் டயானு என்ன முழுத்தையைப் பிரசவிப்பார் என்பதைத்தான் யாராலும் நிச்சயிக்கமுடியாமலுள்ளது. இங்கேதான் விஞ்ஞானம் தோல்வியைச் சந்திக்கிறது.

டயானுவின் முதற்குழந்தை ஆணு, பெண்ணு? இதுபற்றி உலகில் பலரும் குழப்பிக் கொண்டிருக்கின்றனர். பத்திரிகைகள் வேறு குழப்பிக்கொண்டிருக்கின்றன. உலகில் வேறு பிரச்னைகள்பற்றி அவர்களுக்கு கவலையில்லை. இத்தனைக்கும் சார்ள்ஸ் ஒரு இளவரசர் மத்திரமே டயானு சீமாட்டி பதவித்திற்குரிய இளவரசரில்லை. அவ்வளவுதான்!

கடந்த வாரம் இளவரசி டயானு தமது கணவருடன் டெர்ஷயருக்குச் சென்றிருந்த போது இளவரசர் தம்பதிகளை உரவேற்பதற்காக ஆயிரக் பாடசாலைப்பிள்ளைகளுக்கு விடுமுறை கொடுக்கப்பட்டதாம். பிறக்கப்போகும் குழந்தைக்கு ஒரு கார் நிறைய அன்பளிப்புகள் அங்கிருந்தன.

அதோடு கதையாக - பெண்ணுக்கே சான்ஸ் அதிகம் மகனை ஏதிபடும் என்று டயானுவுக்கு தெரியாதிருந்து விட்டதாம் இனத்தை சிநேகிதையிடம் அவர் சொல்லியிருக்கிறார். இப்படித் தொல்லைகளும் என்று யாரும் முன்கூட்டியே தம்மிடம் சொல்லவில்லை என்றும் அவர் கூறினாராம்.

நச்சு இரசாயன ஆயுதங்கள்: அமெ. விஞ்ஞானிகள் கருத்து

நியூயோர்க், நவ. 30

அமெரிக்க டெலிவிஷன் கம்பெனி ஒன்று, அமெரிக்க விஞ்ஞானிகள் மத்தியில் நடத்திய கருத்துக் கணிப்பு, "தென் கிழக்காசிய நாடுகளில் சோவியத் யூனியனும் அதன் நேச நாடுகளும் இரசாயன நச்சு ஆயுதங்களைப் பயன்படுத்தின என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

"மஞ்சள் மழை" என்று அழைக்கப்படும் நச்சுத் திரவ ஆயுதங்களை தெற்கு கிழக்காசியாவிலும் ஆப்கானிஸ்தானிலும் சோவியத் யூனியன் பயன்படுத்தியது என்று அமெரிக்க ராஜாங்க இலாகாவின் குற்றச் சாட்டுக்கு மாறுபட்ட கருத்தையே பெரும்பாலான அமெரிக்க விஞ்ஞானிகள் கொண்டுள்ளனர். விஞ்ஞானிகளின் கண்ணோட்டத்தில் பார்த்தால் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கிடமானது என்று ஹவர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எம். மெஸல்சன் தெரிவித்துள்ளார்.

சி ஐ ஏ. ஏஜண்ட் ஒருவர் தாய்லாந்து, கம்பூச்சியா எல்லையிலிருந்து எடுத்துவந்த நச்சுத் திரவம் படிந்த தாவரம் ஒன்றை ஆதாரமாகக் கொண்டே ரஷ்ய இலாகா இக்குற்றச்சாட்டைக் கூறியது என்று கூறப்பட்டது. ஆனால் இந்த நச்சுத் திரவம் எதிரும் புணர்ப்படுவதாகச் சோவியத் யூனியனில் மட்டுமே பல்வேறு நாடுகளில் காணப்படும் ஒருவகைத் தாவரங்களிலிருந்து இது உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் இராக்கும் லாவும் கருதியுள்ளவர்களிலும் இக்காரணங்களே காணப்படுகின்றன என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

"ராஜாங்க இலாகா முன்வைத்துள்ள ஆதாரங்கள் விஞ்ஞான ரீதியில் நிராகரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க நிர்வாகத்தின் இக்கூற்றுக்களுக்கு ஆதாரம் இல்லை" என்று நியூயோர்க் "நியூஸ்டே" பத்திரிகை எழுதுகிறது.

குண்டு வெடிப்பு: 64 பேர் பலி!

டமாஸ்கஸ், நவ 30

சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களில் 64 பேர் பலியான தாகவும், 135 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

சரோசுறிதிகுள் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தமையாலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிரியாவிலுள்ள தீவிரவாத முஸ்லிம் இயக்கமே இச்செயலை நடத்தியிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. (வே)

1,932 பேருக்கு மன்னிப்பு

தெஹ்ரான், நவ 30

ஈரானில் பல்வேறு குற்றச் சாட்டுக்களின்பேரில் சிறை செய்யப்பட்ட 1,932 பேருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக இஸ்லாமிய பரட்சியோதா நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வே)

'தமிழக சட்டசபையில்

போல் கமிஷன் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்'

எம். ஜி. ஆர். கூறுகிறார்

சென்னை, நவ 30

"திருச்செந்தூர் ஆலய அறநிலை அதிகாரி திரு சுப்பிரமணியபிள்ளை மரணம் குறித்து விசாரணை செய்த போல் கமிஷனின் அறிக்கை அடுத்த தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்"

மேற்கொண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் செலாத்தில் திருவரிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்நாடு அரசாங்க நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு உதவ வேண்டும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்தவித தாமதமும் ஏற்படக்கூடாது என்பதில் தமிழக அரசு மிகவும் உறுதியாக இருக்கிறது.

திருச்செந்தூர் கோயில் அறநிலைத்துறை அதிகாரி சுப்பிரமணியபிள்ளை மர்மமான முறையில் மரணமானது தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி வி ஜே. மூர். போல் விசாரணை செய்து தமிழக அரசிடம் அறிக்கை சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையில் 'போட்டோகிராட்' பிரதிகளை தி. மு. க தலைவர் திரு. மு. கருணாநிதி அரசுக்கு முன்னர் அம்பலப் படுத்தியிருந்தார்.

இதனையடுத்து கருணாநிதியின் இளைமும், தி. மு. க. கட்சி ஆலுலகமும், தி. மு. க. யின் 'முரசொலி' பத்திரிகைக் காரியாலயமும் பொலிசாரால் சோதனையிடப்பட்டது தெரிந்ததே. (வே)

"சிறையில் கைதி மரணம்"

விசாரணை வேண்டும்

செங்கை, நவ. 30

மதுரை மத்திய சிறையில் மரணமான கைதியைப் பற்றி விசாரணை செய்யப்பட வேண்டுமென மத்திய விசாரணை கோரி சட்ட அமைச்சர் திரு. ஆர். வி. வைரமுத்து மத்திய அரசைக் கேட்டுள்ளார். (வே)

75 குடும்பத்துக்கு காணி கிடைக்கும்

(மல்லாகம்)

பேராலையிலுள்ள 35 ஏக்கர் தென்னங் காணியில் 75 இந்தியத் தமிழ் குடும்பங்கள் குடியமர்த்தப்படுவார்கள்.

தற்போது கோழுப்பிட்டி கிராமத்திலும் வசிக்கும் திரு. ஆர். பூபாலசிங்கம் என்பவருக்குச் சொந்தமான தென்னங் காணியே காணியற்ற இந்தியத் தமிழ்க் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பேராலை சிறீ முருகன் ஆலயச் சுற்றாடலில் உள்ள தனது காணியை காணியற்ற இந்தியத் தமிழ்க் குடும்பங்களுக்கு வழங்குமாறு திரு. பூபாலசிங்கம் பேராலையிலுள்ள இந்தியத் தமிழ் குடும்பங்களை ஆலயச் சுற்றாடலில் குடியமர்த்துவதென்றும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இந்தியத் தமிழ் குடும்பங்கள் குடியமர்த்தப்படுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4 லட்சம் செலவில் மருத்துவமனை

[புலோலி]

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் சுமார் நான்கு லட்சரூபா செலவில் மருத்துவமனைக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக சுமார் இரண்டு லட்சரூபா செலவில் அமைக்கப்படவுள்ள வகுப்பறைகள், மாணவர்கள் கூடம், லைப்ரரி, விஞ்ஞான ஆய்வுகூடம் ஆகியன அடங்கிய கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சபையே இக்கட்டிட அமைப்புக்கான பொறுப்புக்களை ஏற்று வருகின்றது.

விலை; ஒன்று ரூபா 4·00

தளபாடங்கள் சீர்கேடு

சாவகச்சேரி

ஆறிவகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தளபாடங்கள் சீர்கேடடைந்த நிலையிலுள்ளது. இதனால் இப்பாடசாலை மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

ஒளி விழா

(கோண்டாவில்)

மாம். பல் தொழிற் நுட்ப நிறுவனத்தில் கிறிஸ்தவ மாணவ மன்றத்தினால் ஒளி விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா மன்றத் தலைவர் திரு இ. ஆசீர் தலைமையில் நடைபெற்றது

REGAL (Jaffna)
Daily 5 Shows
Robert Sads
(New Secret agent) in
BILLION DOLLAR THREAT
(an action packed Spy Thriller)

கைலி மாலிப்பாய்
தினசரி 2-30, 6-15, 9-30
எஜமானத்-பாலாஜி
தீ

ஜான் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வெஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்
(புதிய பிரதி)

வேலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வெஜி
உயர்ந்தமனிதன்

விக்டோ (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
THE BETSY
(Color-Adults only)

சாந்தி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9-45
வரவேற்பு... மகிழ்ச்சி... (வெளி)
குரு
பரபரப்பூட்டும் 11 வது ஜனத்திரள் வாரம்!

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15 6-15, 9-30
சிவாஜி...பத்மினி நடித்த
மரகதம் (புதிய பிரதி)

மனோகரா (வவுனியாவில்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி-கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ஜோதி தினசரி 4 காட்சிகள்
(சுன்னாகம்) எம். ஜி. ஆர். - சரோ நடித்த
சிரித்து வாழவேண்டும்
(சகலரும் வருக)

தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
BRUCE LEE'S
ENTER THE DRAGON

கின்ஸர் 2-வது ஜனத்திரள் மாதம் (யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி.ப. 2-10, 6-15, 9-30
காளி
ரஜனிகாந்த், சிமா (இருவேடம்), விஜயகுமார், படாபடி, மருவிராஜன் (கலர்)
ரசிகர்களின் பேராதரவிருக்கிறது. பல லட்ச ரூபா செலவில் கருவான பயங்கர சண்டைகள்—இனிய பாடல்கள்—நிறைந்த தெஞ்சைத் தொடும் காவியம்

இன்றைய பலன்

சார்த்திகை மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை
(1-1-81)

மேடம்: கதிரதால் பயன் இரு வரவேற் கிடைக்கும். தாய்வழி செல்வியும் வரலாம் அறிஞர்கள் ஆதரவு தருவர். தெழில் புரியும் இடத்தில் செலவுக்கு பெருகும் இன்று சபதினம்.

இடபம்: பணநெருக்கடி விலகுவதற்கான சந்தர்ப்பம் தெரிகுறி தெரியும். புத்திரவழியால் உதவி கிடைக்கும். செலவுக்கு ஒளிவழியாலும் செய்தி வந்து சேரும். பயணமும் மேற்கொள்ளப்படலாம்.

மிதுனம்: பொருள் விரயத்திற்கும் இடமுண்டு. வீடமாற்றம் இடத்தில் கண் துடைப்பு வேலை நடைபெறும் நண்பர் ஒருவர் உங்களை ஏமாற்றக் கூடும். சிக்கல் தனிக்கவும்.

கடகம்: சாதல் விரயங்களை தள்ளிப்போடும். இனிய வான சம்பவங்கள் இடம் பெறும். களஞ்சிரவழியால் பொருள் வரவிற்கும் இடமேற்படலாம். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும் சிறிய மான தினம்.

சிங்கம்: சூழ்நிலை உங்களுக்கு பிடிக்கும் வந்தால் தெரிவிக்கும் அருகிலேயே இருப்பர் சிலர். தாராளமாக செலவழிக்கும் சம்பவங்கள் இடம் பெறும் கடன்பட நேரிடலாம் மன அடக்கம் தேவை.

கன்னி: தாய வரிசைகளில் ஈடுபடுவீர்கள் சுறுசுறுப்பும் மதிப்பு உயரும் புதிய தலைமைப்பதவி வரும் நேரம் மேற்கொள்ளப்பட வேண்டிய காரியங்கள் தாமதமாகும்.

துலாம்: வியாபாரத்துறையில் திருத்தங்கள் செய்தொழில் சிறப்படையும் வாழ்க்கையிலே சமுதாயமான நிலை தெரிகிறது.

விருச்சிகம்: வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தெரிகிறது. சுறுசுறுப்பான வரவேற்பு கிடைக்கும் எதிர்பார்த்த வருவாய்க்கு இடமுண்டு.

தனு: வாழ்க்கையில் சிறு பூசல்கள் தோன்றி மறையும் உடலில் நலம் ஏற்படும் சிறு விடயம் நேரிடும். மதுபானத்தை தவிர்க்கவும்.

மகரம்: எக்காரியத்தையும் எண்ணித் துணிதல் அவசர போக்கினால் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தை தோற்கடிக்கும். எண்ணியபடியே காரியம் முதலீட்டை தவிர்க்கவும் நிதானம் வேண்டும்.

கும்பம்: மிட்டிங் கம்பனிகளில் இடம் பெறும். பிரிந்த வர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் வாழ்தொழில் புரிபவர்களுக்கு நல்ல வரவு உண்டு.

மீனம்: ஆணவப் போக்கு நல்ல அடிபடுக்கும். குடும்பத்திலும் சிறிய பூசலுக்கு இடமேற்படலாம் வயது முதிர்ந்த பெண் மூலம் அவப்பெயருக்கு இடமுண்டு. வாகாரத்தை பேணுவதுடன் அடக்கமும் நன்று.

சோதிடகலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

சாரணர்பயிற்சிக்கு 25 மாணவர்கள்

(சாவகச்சேரி)

இலங்கை சாரணர் தேசிய சங்கம் கிளிநொச்சி மாவட்ட இலவிசு ஆதரவில் சாவகச்சேரிப்பகுதி சாரணர் பொறுப்பாளியர் திரு. எஸ். கிருஷ்ணதம்பி தலைமையில் சாவகச்சேரி தபாலதிபர் ஸ்ரீரியில் அதிகாரப்பிரிவுகள் செய்து வைக்கப்பட்டது.

இச்சாரணர் பயிற்சிக்கு 25 மாணவர்கள் சேர்ந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

"பாலர் பாடசாலைகள் பங்கு மகத்தானது"

(மன்னார்)

"கிராமப் புறங்களில் கல்வி வளர்ச்சியுடைய பாலர் பாடசாலைகள் விரைவாக திறக்கப்படுகின்றன. இதனால் கிராமப்புறங்களில் பாலர் பாடசாலைகள் ஒரு முக்கியத்தேவையாகக் கருதப்படுகிறது" என்று

மன்னார்-நானாட்டான் பிரதேசத்தில் இடம்பெற்ற பாலர்பாடசாலை திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை தெரிவித்தார்.

மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு வி. வரதராஜனினால் பாலர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. இவ் விழாவில் மன்னார் பிரதம அபிவிருத்தி உத்தியோகத்தர், சகல உலக சர்வோதய இணைப்பு உத்தியோகத்தர், ஆகியோரும் உயிடப்பலர் கலந்து கொண்டனர்.

எதிரிகள் விடுதலை

(தொழும்பு)

அனுமதிப்பத்திரமின்றி மரங்களை வெட்டி கொண்டதாகக் குற்றம் சாட்டிய தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டதுடன் டிராக்டரையும், மரங்களையும் எதிரிகளிடம் ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவ்வழக்கு தொடர்பாகத் தொல நீதவான் எஸ். இத்துல் தொடர முடியாமையினால் விசாரணை செய்யப்பட்டது. இவ் வழக்கில் கூலி 9ம் தொகுதி பொறுப்பதிகாரியில் பி.பி.சிறி

'மக்கள் கடைகளுக்கு பாவனையாளர்கள் ஒத்துழைப்பு வேண்டும்'

(அரியாலை)

"மக்கள் கடைகளுக்கு தேவையான பொருட்களை திட்டமிட்டு பிரதான புதிய மக்கள் கடைகளை விரைவில் அபிவிருத்திசெய்யப்படும்" என்று அரியாலை புங்கங்குளம் நிலையத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது அரசாங்க அதிபர் திரு. எஸ். முத்துலிங்கம் தெரிவித்தார்.

அரியாலை புங்கங்குளம் நிலையத்தில் இயங்கி வந்த மக்கள் கடை அரியாலைப்பகுதி மக்களுக்கு மேலும் பெரும்பயனுள்ள சேவை செய்யவேண்டுமானால் பாவனையாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்."

இவ்வாறு அரியாலை அபிவிருத்தி நிதி நிலைக்கள ஆணையாளர் திரு எஸ். கணேசானந்தம் அவர்கள் புங்கங்குளம் வீதியில் அரியாலை மக்கள் கடையைத் திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி அதிகாரி திரு. எஸ். கிறிஸ் பேசுகையில் இங்கு கடை அரியாலைப்பகுதி மக்களுக்கும் மிகவும் பெரும்பயனுள்ளதாகவும் இப் பகுதி மக்கள் இதனை முழுமையாக வேண்டுமெனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஐஸ் தட்டுப்பாடு நீங்கும் விரைவில் தொழிற்சாலை

(பருத்தித்துறை)

யாழ் மாவட்ட மீனவர்களின் எதிர்நோக்கிய ஐஸ் தட்டுப்பாடு இம்மாத இறுதியில் வடமராட்சி தொழிற்சாலை மூலம் நீங்கிவிடும்.

யாழ் மாவட்ட மீனவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஐஸ் பெறக்கூடிய வசதி இல்லாமையினால் பெரும் கஷ்டத்தின் எதிர்நோக்கியிருந்தார்கள். நாளொன்றுக்கு யாழ் மாவட்டத்திற்கு சுமார் 1000 அத்தர் வரை ஐஸ் தேவைப்படுகிறதென்றும் யாழ்ப்பாணத்தில் ஐஸ் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுவதன் மூலம் இப்பிரதேச மீனவர்களின் ஐஸ் தேவை பூர்த்தி செய்யப்படுமென்றும் அரசாங்க அதிபர் திரு. எஸ். முத்துலிங்கம் தெரிவித்தார்.

சங்கிலி அறுப்பு சந்தேகநபருக்கு பிணை

(மானிப்பாய்)

தங்கச்சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாகக் கைதான சந்தேகநபரை பிணையில் வைக்க மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் சிவலோகவரி என்பவரது வீட்டுக்குவந்த அடையாளந்தெரியாத நபர் ஒருவர் சுமார் எழுத்தரிலிருந்த 3000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியையும் கொள்ளையடித்துச் சென்றதாக மானிப்பாய் பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

இது குறித்த சந்தேகநபரான மல்லாகத்தைச் சேர்ந்த மாணிக்கம் மாரிமுத்து என்பவரைக் கைதுசெய்த மானிப்பாய் துணைப்பொலிசார் இவரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது மேலதிக விசாரணைகளுக்காக நீதிபதி திரு. இ. ஆர். இராஜேந்திரம் உத்தரவிட்டார். (உ)

கடையுடைத்து திருட்டு

மானிப்பாய்)

கடையை உடைத்து உடைக்கப்பட்டு அதிலிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையை அடுத்த ஊறணியில் வல்லிபுரம் சிவகுரு என்பவரது கடை இரவு நேரம் உடைக்கப்பட்டு 1067 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன

இது குறித்து மானிப்பாய் துணைப் பொலிஸ் அலுவலர் புகார் தெரிவித்ததை அடுத்து பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (இ)

இடமாற்றம்

(துணுக்காய்)

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் காலத்தில் பிரசை அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரிந்த திரு. கி. சிவசிதம்பரம் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். அவரின் இடத்துக்கு திரு. க. ஸ்ரீவரதராசம் முல்லைத்தீவிலிருந்து இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.

துணுக்காயில் கடமையாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. கிரியரத்தினம் முல்லைத்தீவு அரசாங்கத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். அவரின் இடத்துக்கு திரு. க. ஸ்ரீவரதராசம் முல்லைத்தீவிலிருந்து இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.

பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கணக்காளராகக் கடமையாற்றிய திரு. க. துரைசிங்கம் துணுக்காய் பிரிவுக்கு இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.

ஜப்பானிய அமைச்சரவை ராஜினாமா

டோக்கியோ நவ. 30

ஜப்பானிய பிரதமர் திரு. சுக்கி தலைமையிலான அமைச்சரவை இன்று ராஜினாமாச் செய்துள்ளது.

அமைச்சரவையில் மாற்றங்கள் செய்து அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டே அமைச்சரவை ராஜினாமா செய்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பரிசளிப்புவிழா

(மன்னார்)

சுமுகம் இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம அதிதி மாகாண சபை அதிபர் திரு. வைரமுத்து கலந்து கொள்வார். (இ)

யாழ் நகரிலுள்ள அமரர் எம். திருச்செல்வத்தின் உருவச்சிலைக்கு அன்னாரின் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற அஞ்சலிசெலுத்தும் வைபவத்தில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மாலையிடுவதை முதல் படத்திலும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், யாழ் மேயர் திரு. இராசா விசுவநாதன், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் ஆகியோர் சிலைக்கு அருகேநிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

பருத்தித்துறையிலும் வெள்ளப்பெருக்கு

(பச்சிலைப்பள்ளி)

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் பெய்த பெருமழையினால் பருத்தித்துறை கிழக்குப் பகுதியிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

முள்ளியானில் வீடுகளுக்குள் வெள்ளம்புகுந்ததினால், சில குடும்பங்கள் வேறு இடத்திற்கு இடம்பெயர்ந்துள்ளன. மருதன்கேணிக்கும் ஆழியவளைக்கும் இடையில் வீதியில் மூன்றடி வெள்ளம் நிற்பதினால் ஆழியவளை பஸ் சேவை தாளையடியுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறைகிழக்கிலுள்ள நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கிஉள்ளன. வெங்காயத் தோட்டங்கள் வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்பட்டுள்ளன.

அரச அதிபருக்கு கோரிக்கை

பருத்தித்துறை கிழக்கின் வெள்ளநீர் வடிந்தோட, தொண்டமானாறு பாலத்தைத் திறக்குமாறு ஆழியவளை கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். அரசாங்க அதிபரை தந்தி மூலம் கேட்டுள்ளது.

பெருமழையினால் பருத்தித்துறை கிழக்கிலுள்ள வயல்கள் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தொண்டமானாறு பாலம் திறக்கப்படும் பட்சத்தில் இவ்வெள்ளநீர் விரைவாகவடிந்தோட முடியும்.

ஒழுக்கத்தின் மூலமே கல்லூரி சிறந்த பெறுபேறுகளை பெறலாம்

(அரியாலை)

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே ஐக்கியம் வளர்ந்தால் பாடசாலைகள் வளர்ச்சியடையும் மாணவர்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கும் ஆசிரியர்களே பாடசாலைகளின் வளர்ச்சியிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் கவனம் செலுத்துபர்களாவர். இவர்களே நாட்டுக்கு ஏற்ற சிறந்த பிரஜைகளை உருவாக்குபவர்கள்''

இவ்வாறு யாழ் பரியோவான் கல்லூரி ஆசிரியர் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆசிரியர் குழுவிற்கும் மாணவர்கள் தலைவர்கள் குழுவிற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் பின்னர் நடைபெற்ற உண்டாடல் நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''பரியோவான் கல்லூரியில் கடந்த பல்லாண்டுகளாக ஆசிரியர்களுக்கு அடுத்தபடியாக மாணவர் தலைவர்கள் விளங்குகிறார்கள், மாணவர் தலைவர்கள் மாணவரிடையே கட்டுப்பாட்டையும் கடமையுணர்ச்சியையும் வளர்க்கிறார்கள் மாணவர் தலைவர்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளின் மூலம் மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். கல்லூரிகளின் வளர்ச்சியிலும் கவனஞ்செலுத்தவேண்டியது இவர்களது கடமையாகும். மாணவர்களிடையே சிறந்த ஒழுக்கமான வாழ்வு ஏற்படுத்தவதன் மூலமே கல்லூரியில் சிறந்த கல்விப் பேறுகளை நாம் பெறமுடியும்,'' என்று குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் குழுவின் சார்பின ஆசிரியர் திரு. சிதம்பரநாதனும், மாணவர்கள் குழுவின் சார்பிற் செல்வன் விக்னராசாவும் உண்டாடல் நிகழ்ச்சியில் பேசினார்கள்.

கேட்டீர்களா...

3ம் பக்கத்தொடர்ச்சி

விக்கலையே என்று டயானா அங்கலாய்த்துக் கொண்டாராம். முன்கூட்டித் தெரிந்திருந்தால்...? இதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை.

0 0 0

இயற்கையை அனுசரித்து வாழ்பவர்கள் உஷ்ணமிகுந்த நாட்களில் நுங்கு பனம்பழங்களை அருந்துவர். பனிமிகுந்த மார்கழி, தை, மாசி காலங்களில் மக்கள் பசியின்மை, தாகமிகுதி போன்ற பித்த அதிகரிப்பால் உண்டாகும் வியாதிகளினால் அவஸ்தைப் படுவார்கள். இவ் வியாதிகளை நிவர்த்தித்து, பித்தத்தை அடக்கி, உடலைச் சமநிலைப் படுத்தவல்லது நெல்லிக்கனியொன்றே, நெல்லிக்கனியில் ஊட்டச்சத்து 'சி' ஏராளமாக உண்டு. அதாவது இரண்டு தோடம்பழத்திற்கு ஒரு நெல்லிக்கனி சமமென்பர்.

இப்படியான ஒரு நற்கனி மரத்தை நாம் ஒவ்வொரு வீட்டிலும் உற்பத்தியாக்கி ஆரோக்கியமாக வாழவேண்டுமென்ற குறிக்கோளுடனேயே மில்வைற் ஸ்தாபனத்தார் இலவசமாக நெல்லிக்கன்றுகளை விநியோகிக்கின்றார்கள். நாம் பெற்று பயனடைவோமாக. ஆரோக்கிய வாழ்விற்கு தினமொரு நெல்லிக்கனி உண்போமாக.

—கொண்டோடி.

பாரகளுமன்ற...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ஊழல் மோசடிகளுக்குக்காரணமாக இருந்திருக்கின்றார். இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், (சபாநாயகரைப் பார்த்து) உங்கள் பெயருக்குத் தார் பூசுவதாக அமைந்துவிடும்''

பிரதமர் பதில்

இவ்விஷயம் குறித்து சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியதே சரியான முறையாகும். அவ்வாறு கவனத்திற்குக் கொண்டு வரப்படும் பட்சத்தில் அவர் அவ் விஷயத்தை ஆலோசனைக் குழுவின் விசாரணைக்கு விடுவார்'' என்றும் இதுகுறித்து கருத்துத்தெரிவித்த பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கூறினார்.

இவ் விவகாரம் குறித்து உரிய விசாரணை நடத்தப்படுவதை தாம் வரவேற்பதாக நீதிஅமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா தெரிவித்தார். (ம)

பகிரங்க...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

உரிய பொருள்கள் பறிக்கப்படவில்லை, சில இடங்களில் பொருட்கள் இருந்தும் வேலைகள் நடைபெறவில்லை. போடப்பட்ட கல்லும் மண்ணும் வெள்ளத்துடன் போகிறது. சகல வழிகளிலும் மாநகரசபைப் பணம் செலவழிகிறது. எனது அரசடி வட்டாரம் வெள்ளத்தில் மூழ்குகிறது. வட்டாரவேலைகளைக் கவனிக்கும் மேற்பார்வையாளர்களை அங்கு காணவில்லை''

மாநகரஉபமுதல்வர் திரு. எஸ். அலோசியஸ் வாய்க்கால்கள், வடிகால்களின் சீர்கேடுகள் குறித்து காரசாரமாகப் பேசினார்.

இக் குறைபாடுகளுக்கு வெளிக்கள உத்தியோகத்தர்களே பொறுப்பென்றும், இவர்களைசட்டத்தின்முன் கொண்டு வந்து நிறுத்தி தண்டிக்கவேண்டும் என்றும் திரு அலோசியஸ் கேட்டுக்கொண்டார்.

ஏழை, எளிய மக்கள் சுகாதாரச்சீர்கேட்டினால் தொற்று நோய்க்குள்ளாகிறார்கள் என்றும், வடிகால்கள் திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் மாநகரசபைத் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து இக் கிழமைக்குள் வாய்க்கால்களை ஆழமாகவும் அகலமாகவும் திருத்தம் செய்யவேண்டும் என்றும் அவர் ஆலோசனைகூறினார்.

மாநகரவேலைப்பகுதி அதிகாரிகள் சும்மா இருந்து சம்பளம் எடுக்கிறார்கள் என்று குறிப்பிட்ட உபமுதல்வர் திரு. அலோசியஸ் இவர்களின் வேலைகளைக் கண்காணிக்க வேண்டும் என்றும் கூறினார். [மா]

ப.நோ.கூ. சங்கக் கடையில் கொள்ளை!

[பச்சிலைப்பள்ளி]

முள்ளியன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அல்லது சனிக்கிழமை இரவு சங்கக்கடை கொள்ளையடிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது. மேற்கூறிய இரு தினங்களும் கடை திறக்கப்படவில்லை.

அரிசி, சீனி, மாபால் உணவுப் பொருட்கள், சவர்க்காரங்கள் என்பன கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன.

முள்ளியானில் வெள்ளப் பெருக்கினால் போக்குவரத்துக்கள் தடைப்பட்குருப்பதால் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதியை உத்தியோகத்தர்கள் நேரில் சென்று மதிப்பிட முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இச் சங்கக்கடை இரண்டாவது தடவையாக இப்பொழுது கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

விமானப்படை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ராஜலிங்கம் மற்றும் எதிர்க்கட்சி முதல்வரின் அந்தரங்கச் செயலாளர் திரு. ஆர். பேரின்பநாயகம் ஆகியோர் விமானப்படை விமானத்தில் வந்துசேர்ந்தனர்.

குழுநிலை விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று ஒரு கட்டத்தில் பேசுகையில், பிரதமர் அனுப்பி வைத்த விமானப்படை விமானத்தில் தான் நாங்கள் இங்கு வந்து சேர்ந்தோம் என்று குறிப்பிட்டார். [ம]

திருப்பத்தூர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராமச்சந்திரனையும், அதி முகவினரையும், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியம் பாராட்டினார்.

ஜனதா கட்சியுடன் தி மு க. தொண்டர்கள் சேர்ந்து இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு எதிராக வேலைசெய்ததாக திரு. சுப்பிரமணியம் கண்டனம் தெரிவித்தார். இந்திரா காங்கிரஸிற்கு ஆதரவு வழங்கிய சகல கட்சிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்தார். [க]

ஒருவர் கைது

(கிளிநொச்சி)

பரந்தனைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை கிளிநொச்சியில் வைத்து துப்பறியும் பொலிசாரினால் கைதுசெய்தப்பட்டுள்ளார்.

பரந்தன் 5ம் வாய்க்காலைச் சேர்ந்த 'பிறீ' என்று அழைக்கப்படும் சிறீதரன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

பரந்தனைச் சேர்ந்த பெரிய தம்பியும், அவரது சகொதரர் ஒருவரும் ஏற்கனவே பரந்தனிலுள்ள அவர்களது வீட்டில் வைத்து ராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதும், அதை தொடர்ந்து ஞானப்பிரகாசம் ஞானசேகரம் என்பவரை வவனியாவில் வைத்துத்துப்பாக்கியால் சுட்டுக் கைதுசெய்ததும் குறிப்பிடத்தக்கது. (கொ)

பஸ்விபத்து

[யாழ்ப்பாணம்]

நேற்றுப் பெய்த பெருமழையினால் மண்டைதீவில் ஒரு பஸ்குடை சாய்ந்தது. இதனால் பஸ்வில் பிரயாணம் செய்த பயணிகள் எவரும் காயமடையவில்லை. [கொ]

மாவட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னால் எதிர்காலத்தில் ஜனநாயக நடைமுறைக்கே ஆபத்து ஏற்படும்'' என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார். [இ]

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை

கிணறு வெட்டுதற்கு

கேள்விப்பத்திர அறிவித்தல்

செய்யவேண்டிய வேலை:

தற்பொழுது சரசரி 11 அடி 06 அங்குலம் ஆழத்திற்கு வெட்டப்பட்டுள்ள 20 அடி விட்டமுள்ள கிணற்றை மேலும் சுமார் 9 அடியால் ஆழமாக்குதல்.

இடம்:

சுன்னாகம் — புன்னாலைக்கட்டுவன் வீதியில் கரட்டியர் வைரவர் கோவிலிற்கு எதிராக.

கேள்விப்பத்திரம்:

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கான படிவங்களும் ஏனைய விபரங்களும் எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1981 டிசம்பர் 06-ந் திகதி காலை 10-00 மணி வரை குவ இக்காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரதேச முகாமையாளர் (வட. பி)
யாழ்ப்பாணம்.

தேசிய நீர்வழங்கல் சக வடிகாலமைப்புச்சபை
330, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம்.
1981-11-30. 1600

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி கனகாம்பிகை

கந்தர்மடத்தைச் சேர்ந்தவரும், மலேசியா வாசியுமான திருமதி சின்னத்தம்பி கனகாம்பிகை காலமானார். இலர் மலேசியா புகையிரதநிலைய முன்னாள் அதிகாரி காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்புமனைவியும், மகேந்திரராஜ் [கோலாலம்பூர்], தேவேந்திரராஜ் [கோலாலம்பூர்], புவனேந்திரராஜ் [கோலாலம்பூர்], கமலாசனி ஆகியோரின் அருமைத்தாயாரும், இ. சபாலிங்கம் (முன்னைநாள் கல்லூரி அதிபர்) இ. கனகலிங்கம் (அதிபர், பலாலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று (1-12-81) செவ்வாய் கிழமை யாழ்ப்பாணம், கந்தர்மடத்திலுள்ள 98, அரசடி வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு மாலை 3-30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். 1602

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள "[illegible]" விமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 [illegible] டிசம்பர் 1-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered at News Paper, The General P. O. Sri Lanka Regd.C. B. 100280/81, P. O. Box 49. Jaffna. [illegible] 7707, [illegible] 8196.